முக்கிய வார்த்தைகள்:
*பிள்ளை / பிள்ளைகள்*
*பொறுப்புணர்வு அமானிதம்*
*வளர்ப்பது / வழிகாட்டுவது*
*குணம்*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**03 அக்டோபர் 2025 / 11 ரபீவுல் ஆகிர் ஹிஜிரி 1447**

# பிள்ளைகள்: வெகுமதிகள், அமானிதங்கள், சோதனைகள்

**ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي أَرْسَلَ رَسُولَهُ بِٱلْهُدَىٰ وَدِينِ ٱلْحَقِّ لِيُظْهِرَهُ عَلَى ٱلدِّينِ كُلِّهِ وَكَفَىٰ بِٱللَّهِ شَهِيدًا. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ نَبِيَّنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَىٰ سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَىٰ آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.**

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலமாகவும், அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீதான நமது "தக்வா" [பக்தியை] அதிகரித்துக் கொள்வோமாக! நமது பிள்ளைகள் மற்றும் குடும்பத்தார்களின் விஷயத்தில் நமக்குள்ள பொறுப்புகளை முடிந்த அளவு சிறப்பாக நிறைவேற்றுவோமாக! அல்லாஹ், நம்மனைவரையும் அவனது சொர்க்கத்தில் ஒன்று சேர்ப்பானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பிற்குரிய சகோதரர்களே!**

நமது இளம் பிள்ளைகள் நம்மைப் பார்த்து: *ஏன் நாம் அன்றாடம் ஐந்து நேரங்களில் தொழுகிறோம்? ஒரு தடவை மட்டும் தொழுதால்*

*போதுமாகாதா? நமக்கு எவராவதொருவர் தீங்கிழைத்தால் அதே போன்று நாமும் அவருக்கு ஏன் தீங்கிழைக்கக் கூடாது?* என்று கேட்டதுண்டா?

பிள்ளைகளின் பரிசுத்தமான உள்ளங்களிலிருந்து உதிக்கும் இந்த அப்பாவிக் கேள்விகளானது, அவர்களுக்கு நாம் நம்பிக்கையுடனும் நற்குணத்துடனும் பொறுப்புணர்வுடனும் வழிகாட்ட வேண்டுமெனச் சுட்டிக் காட்டுகின்றன. பிள்ளைகளை வளர்ப்பதில் இவ்விதமான சவால்கள் உள்ளன; மிகப் பெரும் அமானிதங்களாக உள்ள நமது பிள்ளைகள் கல்வியறிவு, விவேகம் மற்றும் மதிநுட்பத்தின் பால் அவசியமானவர்களாக இருக்கின்றார்கள்.

உண்மையில், பிள்ளைகள் நமக்குச் சோதனைப் பொருட்களாக இருக்கின்றார்கள் என அல்லாஹ் நமக்கு நினைவூட்டுகிறான். எல்லாம் வல்ல அல்லாஹ், திருக்குர்ஆனின் "அத்தஃகாபூன்" எனும் அத்தியாயத்தின் 15-வது வசனத்தில் கூறுகிறான்:

إِنَّمَآ أَمۡوَٰلُكُمۡ وَأَوۡلَٰدُكُمۡ فِتۡنَةٞۚ وَٱللَّهُ عِندَهُۥٓ أَجۡرٌ عَظِيمٞ ١٥

பொருள்: "உங்கள் பொருள்களும் உங்கள் பிள்ளைகளும் [உங்களுக்குச்] சோதனை தான்; ஆனால் அல்லாஹ்விடம் தான் மகத்தான கூலி இருக்கின்றது"

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**

உண்மையில், பிள்ளைகள் அல்லாஹ்வினால் வழங்கப்படும் அருள்களாக இருக்கின்றார்கள்; அதே சமயம், அவர்கள் பெற்றோர்களுக்குச் சோதனையாகவும் இருக்கின்றார்கள். ஒருவர், அல்லாஹ்வுக்கு அடிபணிந்து நடப்பதில் எவ்வாறு தொடர்ந்து நிலைத்து நிற்கின்றார் என பிள்ளைகள் மூலமாகவும் சோதிக்கப்படுகிறார்.

எனினும், அல்லாஹ்வுக்கு நாம் அடிபணிந்து நடக்க வேண்டும் என்பதன் பொருள், நமது பிள்ளைகள் விஷயத்தில் நமக்குள்ள பொறுப்புகளை நாம் புறக்கணித்து விட வேண்டும் என்பதல்ல, மாறாக, நமது வாழ்க்கை மற்றும் நம்மிடையே காணப்பட வேண்டிய உறவுமுறை ஆகியவற்றின் மையப் பகுதியாக அல்லாஹ்வை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நமது பிள்ளைகளைப் பயிற்றுவிப்பதிலும் அவர்களின் குணங்களை சிறப்பாக வடிவமைப்பதிலும் நம்மால் முடிந்த அளவு சிறப்பாகச் செயல்பட வேண்டுமென நாம் அறிவுறுத்தப்பட்டுள்ளோம்.

அல்-இமாம் இப்னுல் கய்யூம் [ரஹ்] அவர்கள் தனது "துஹ்ஃபதுல் மவ்தூத்" எனும் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்:
"சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு அநீதம் செய்கிறார்கள்; ஒழுக்கமின்றி, மார்க்க வழிகாட்டுதலின்றி தமது மனோ இச்சைகளின் பிரகாரம் நடந்து கொள்ளட்டும் என பிள்ளைகளை விட்டு விடுகிறார்கள்; இதுதான் உண்மையான அன்பு எனவும் கருதுகிறார்கள்; ஆனால் உண்மையில், அவர்களின் இவ்விதமானப் புறக்கணிப்பானது, பிள்ளைகளின் வருங்காலத்தை இம்மையிலும் மறுமையிலும் வீணாக்கி விடுகிறது. இது பிள்ளைகளுக்கு அவர்கள் செய்யும் அநீதமாகும்"

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**
பிள்ளைகள் மிகப் பெரிய அமானிதங்களாகவும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அருள்களாகவும் இருக்கின்றார்கள் என்பதை அறிகின்ற நாம், அப்பிள்ளைகளை வளர்த்துப் போஷிப்பதில் எந்த அம்சங்களுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமெனச் சிந்திக்க வேண்டும். இது சம்பந்தமாக, இன்றைய "குத்பா" பிரசங்கம் மூன்று முக்கிய அம்சங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறது:

**முதலாவதாக, மார்க்கக் கல்வி**
மார்க்கக் கல்வியானது, ஒரு பிள்ளையிடம் அதன் தனித்தன்மையை உருவாக்குவதில் அடிப்படை அம்சமாக உள்ளது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு வழிகாட்டி, அவர்களின் கேள்விகளுக்கு விளக்கமளிக்கக்

கடமைப்பட்டுள்ளார்கள்; உதாரணமாக, படைப்பைப் பற்றி அவர்கள் கேள்வி கேட்கலாம்; நம்மைப் படைத்தவன் யார்? எந்த நோக்கத்துக்காக நாம் படைக்கப்பட்டுள்ளோம்? மரணத்துக்குப் பின் நமக்கு என்ன நடை பெறும்? என்றெல்லாம் கேள்விகளைக் கேட்கலாம்; இக்கேள்விகளுக்கெல்லாம் நல்ல முறையில் விளக்கமளிப்பதானது அவர்களுடைய வாழ்க்கையின் கண்ணோட்டத்தைச் சிறப்பாக வடிவமைக்கும்.

இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களின் நற்குணத்தையும் அவர்களின் தனித்தன்மையையும் அறிந்து கொள்ளுமாறு பிள்ளைகளுக்குக் கூறுங்கள்; எது சரி, எது தவறு என அவர்கள் பிரித்துப் பார்ப்பதற்கு வழிகாட்டுங்கள்; தொழுகை, பிரார்த்தனை, நோன்பு ஆகியக் கடமைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற சிந்தனையை அவர்களின் உள்ளங்களில் ஏற்படுத்துங்கள்; அதே சமயம், ஞாபகப்படுத்திக் கொண்டும், உபதேசம் செய்து கொண்டும் மட்டும் இருப்பது கூடாது. நமது செயல்கள் மூலம் அவர்களுக்கு நாம் முன்மாதிரியாக அமைய வேண்டும். வீடுகளில் இஸ்லாமியச் சூழல்களை உருவாக்குங்கள். உதாரணமாக, ஒவ்வொரு செயலையும் ”பிஸ்மில்லாஹ்” எனக் கூறி ஆரம்பிக்க வேண்டுமெனக் கூறுங்கள்.

பிள்ளைகளிடம், அவர்களின் இளம் வயதிலேயே இஸ்லாமிய உயிரோட்டத்தையும் மார்க்கத்தைச் செயல்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தையும் ஏற்படுத்தப்பட்டு விட்டால், அது அவர்களிடம் உண்மையான முஸ்லிமின் நன்னடத்தையை ஏற்படுத்துவதோடு, வாழ்க்கைச் சவால்களையும் சோதனைகளையும் அவர்கள் எதிர்கொள்வதற்குச் சிறந்த ஏற்பாடாகவும் அமைந்து விடும்.

**இரண்டாவதாக, நன்னடத்தைகளையும் நெறிமுறைகளையும் அவர்களிடம் எற்படுத்தி, அவர்களை முன்னேற்றுவது.**

பிள்ளைகளிடம், அவர்களின் இளம் வயதிலிருந்தே நன்னடத்தைகள் உருவாக்கப்பட வேண்டும், நீதி, நேர்மை, பணிவு, பொறுமை ஆகிய மதிப்பீடுகளைப் பற்றி பிள்ளைகளுக்குப் போதனை செய்யுங்கள்; கோபத்தை அடக்க வேண்டுமென்றும், நல்ல பழக்க, வழக்கங்களுக்கு முன்னுரிமை

கொடுக்க வேண்டுமென்றும், மற்றவர்களை மன்னிக்க வேண்டுமென்றும் அவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள்.

தற்காலத்தில், நமது பிள்ளைகள் பலவித அழுத்தங்களை எதிர்கொள்கிறார்கள்; நண்பர்கள் மற்றும் சகாக்களின் அழுத்தங்கள், கல்வியில் போட்டித்தன்மை, சமூக ஊடகங்களின் ஆதிக்கம் போன்ற பல அழுத்தங்களை எதிர்கொள்கிறார்கள். இச்சூழலில் நன்னடத்தையையும் நற்குணத்தையும் அவர்களிடம் ஏற்படுத்துவது அவசியமாக உள்ளது. அவர்கள் தம்மைத் தாமே சிறப்பாக நிர்வகித்துக் கொள்ளவும், எந்தச் சூழ்நிலையில், எம்மாதிரியான அழுத்தங்கள் ஏற்பட்டாலும் அவற்றை வெற்றிகொள்ளவும் நன்னடத்தைகள் அவர்களுக்கு உதவியாக இருக்கும்.

**மூன்றாவதாக: சமூகப் பொறுப்பும் ஒழுக்கமும்**

ஒருவர் மற்றவரை மதிக்க வேண்மென்ற நற்பண்பை பிள்ளைகளிடம் ஏற்படுத்த வேண்டும்; அப்பண்பை, அவர்கள் தங்களின் குடும்பத்தார் களிடமிருந்து ஆரம்பித்து, அண்டை வீட்டார்கள், ஆசிரியர்கள், நண்பர்கள் ஆகிய அனைவரிடம் செயல்படுத்தக் கற்றுக் கொடுக்க வேண்டும். மற்றவர்களைச் சிறுமைப்படுத்துவதோ, அவமதிப்பதோ கூடாது எனப் போதனை செய்யுங்கள்; தங்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமெனக் கற்றுக் கொடுங்கள்; அப்போது அவர்கள் தமக்கு நன்மையை விரும்புவது போன்று மற்றவர்களுக்கும் எப்போதும் நன்மையை விரும்பக் கூடியவர்களாக ஆகுவார்கள்.

சமுதாய வேலைகள், சமூகச் சேவைகள் ஆகியவற்றைச் செய்யுமாறு அவர்களைத் தூண்டி, மற்றவர்கள் எதிர்கொள்ளும் கஷ்டங்கள் விஷயத்தில் அவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள். அதன் மூலம் நாம் அவர்களிடம் இரக்க சிந்தனையை ஏற்படுத்தலாம். இஹ்ஸான் எனும் உபகாரச் சிந்தனை, மேன்மையை அடைதல், நீதமாக நடப்பது போன்றவற்றைப் பற்றிப் பிடிக்கும் வங்கால தலைமுறையினராக அவர்களை உருவாக்கலாம்.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**

இறுதியாக, பிள்ளைகள் அல்லாஹ்வின் அருள்களாகவும் அல்லாஹ்வினால் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமானிதங்களாகவும் இருக்கின்றார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்; ஒரு பிள்ளை, இவ்வுலகில் நமக்கு மகிழ்ச்சியைத் தரக் கூடியதாகவும், சொர்க்கத்துக்கான நமது பயணத்தை எளிதாக்கும் துணைச் சாதனமாகவும் நமக்கு அமையலாம்; இன்ஷாஅல்லாஹ். எனவே, பிள்ளைகளை கிருபை மற்றும் கருணைச் சிந்தனையுடன் காணுங்கள்; ஓரிறை நம்பிக்கை எனும் ஈமானை அடிப்படையாகக் கொண்ட நற்குணத்தை அவர்களிடம் ஏற்படுத்துங்கள்; எல்லாம் வல்ல அல்லாஹ், அடுத்த முஸ்லிம் தலைமுறையினரை சிறப்பாக வளர்ப்பதில் நமக்குத் தொடர்ந்து வழிகாட்டுவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.

**<u>இரண்டாவது பிரசங்கம்</u>**

**الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.**

**أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.**

**وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.**

**اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنْهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلَسْطِينَ وَفِي كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ**

فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلَامَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.